# FIRST INFORMATION REPORT
# முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~ Under Section 173 BNSS
~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8040897

1. District மாவட்டம் : The Nilgiris PS: காவல்நிலையம் V&AC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 06/24/AC/NI Date: நாள் 24.10.2024

2. (i) Act சட்டம்: Prevention of the Corruption Act, Sections பிரிவுகள்: 7(b)
   (ii) Act சட்டம்: 1988 as amended by the Sections பிரிவுகள்: –
   (iii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: –
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : –

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 30.05.2024 Date to : நாள் வரை 24.10.2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 16.25 hrs Time to : நேரம் வரை 19.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2024 Time நேரம் : 11.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2024 Time நேரம் : 11.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Tamil Typed Complaint.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Taluk office, Kotagiri, at about 30 km East.
   Beat Number : முறைக் காவல் எண் – (b) Address : முகவரி –
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : – District : –
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. K. Srinivasan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் –
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 43 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் –
   (f) Occupation : தொழில் Special Tahsildar (Elections) i/c Special District Inspection Cell officer, (g) Address : முகவரி Collector office, The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) Tmt. S. Gomathi, Tahsildar 2) Tmt. L.K. Uma Nageswari, HQ Dy. Tahsildar, 3) Tmt. D. Priya, VAO, Arakodu, Kokkodu Village 4) Tr. A. Kamal, VAO, Kotagiri-II i/c Kotagiri-I Village and 5) Tr. T. Naveen Kumar, VAO, Jegathala-I village, Taluk office, Kotagiri, Nilgiris

8. Reasons for delay in reporting by the complainant / Informant: No delay
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet Enclosed.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 24/10/24 | [signature] 24/10/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 24.10.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 13.00hrs.

Name: பெயர் P. Parimaladevi
Rank: நிலை Inspector of police, Vigilance & Anti-Corruption The Nilgiris. No. எண் ..........

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

<u>நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2024/AC/NI, u/s. 7 (b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-</u>

இன்று 24.10.2024-ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர், P.பரிமளாதேவி ஆகிய நான் அலுவலகத்தில் இருக்கும்போது நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்) சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், திரு.K.சீனிவாசன் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை பெற்று நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/2024, u/s. 7 (b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் திரு.K.சீனிவாசன், தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்), சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நீலகிரி. அம்மையீர் பொருள்: நீலகிரி மாவட்டம் - கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தில் 23.10.2024-ம் தேதி 19.00 மணிமுதல் 24.10.2024-ம் தேதி 05.00 மணிவரை திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது - நடவடிக்கை எடுக்க கோருதல் - தொடர்பாக. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். நான் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் தனி வட்டாட்சியர் (தேர்தல்கள்) ஆக பணிபுரிந்து வருகிறேன். நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் வட்டாட்சியர் திருமதி.S.கோமதி, தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.L.K.உமா மகேஸ்வரி, கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் கோத்தகிரி தாலுக்கா

அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் நிலத்திற்கான அனுபோகச் சான்று, சிட்டாவில் பெயர் சேர்க்கவும், நீக்கவும் மற்றும் மலை மாவட்டத்தில் சட்டவிரோதமாக JCB கனரக வாகனங்களை இயக்க அனுமதிக்கவும் அதன் உரிமையாளர்களிடமிருந்து கையூட்டு கேட்டுப் பெறுவதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவல் கிடைக்கப்பெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவு Pdl.A1.No.30/2024 நாள்:23.10.2024-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராக நியமிக்கப்பட்ட நான், நீலகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.P.பரிமளாதேவி மற்றும் காவல் குழுவினருடன் கோத்தகிரி பழைய நீதிமன்ற சாலையில் அமைந்துள்ள கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன். அந்த திடீர் ஆய்வின்போது நீலகிரி மாவட்ட சிறப்பு ஆய்வுக்குழு அலுவலராகிய நான் மற்றும் நீலகிரி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் ஆகியோரால் தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் விவரம் பின்வருமாறு: அந்த திடீர் ஆய்வானது கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தில் 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. காவல் ஆய்வாளர் கோத்தகிரி தாலுக்கா அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வட்டாட்சியர் அலுவலகத்தின் உள்ளே பெண்களும், ஆண்களும் இருந்தனர். காவல் ஆய்வாளர் அவர்கள் தாலுக்கா அலுவலகத்திலிருந்து வெளியே யாரும் செல்லாதவாறும், வெளி நபர்கள் யாரும் உள்ளே வராதாவாறும் காவலர்களைகொண்டு காப்பு போடப்பட்டது. அந்த அலுவலகத்தில் மேற்கு பார்த்தவாறு வட்டாட்சியர் என்று எழுதப்பட்ட கதவை தட்டி உள்ளே நுழைந்தபோது தெற்கு பார்த்து இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரிடம் காவல் ஆய்வாளர் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, என்னையும் காவல் குழுவினரையும் அறிமுகம் செய்து வைத்து எங்களுடைய உடைமைகளை காண்பித்தும், கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்தை திடீர் ஆய்வு மேற்கொள்ள வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தோம். அவரிடம் திடீர் ஆய்வுக்குழுவினர் விசாரிக்க தனது பெயர் திருமதி.S.கோமதி என்றும், அவர் 26.06.2023-ம் தேதி முதல் கோத்தகிரி வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவருடைய ஹேண்ட்பேக்கிலிருந்து பணம் ரூ.600/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த

பணத்தைப்பற்றி விசாரிக்க வீட்டிலிருந்து செலவுக்கு எடுத்து வந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வட்டாட்சியர் அவர்கள் தன்னிடமிருந்த கருப்பு நிற Vivo 1901 மாடல் செல்போன் எடுத்து ஆஜர் செய்தார். வட்டாட்சியர் அறைக்கு எதிரே கிழக்கு பார்த்தவாறு தலைமையிடத்து துணை வட்டாட்சியர் என்ற எழுதப்பட்ட அறையில் கிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க தனது பெயர் திருமதி.L.K.உமா மகேஸ்வரி என்றும், 28.12.2023-ம் தேதி முதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தனது ஹேண்ட்பேக்கிலிருந்து பணம் ரூ.300/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க வீட்டிலிருந்து செலவுக்கு எடுத்துவந்ததாக தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்க வகையில் இருந்ததால் அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அவரது அறையில் இருந்த பீரோ சாவியை கேட்டபோது, சாவியானது உதவியாளர் திரு.B.J.தருமன் என்பவரிடம் இருப்பதாக தெரிவித்து, அவர் குஞ்சப்பணை சோதனைசாவடி பணிக்கு சென்றுவிட்டதாக தெரிவித்தார். அவரை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள் செல்போனில் தொடர்புகொண்டு அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். அவரும் அலுவலகத்திற்கு வந்து பீரோ சாவியை எடுத்து கொடுத்தார். பின்னர் அந்த பீரோ முழுவதும் சோதனையிடப்பட்டது. பீரோவின் உள் அறையில் மடிப்புடன் இருந்த துணிப்பையில் மடித்து வைத்த வெள்ளை காகிதத்தில் இருந்த பணத்தை தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்கள் எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணிப்பார்க்க அதில் 500 ரூபாய் நோட்டுக்கள் 107 எண்ணிக்கைகளிலும், 200 ரூபாய் நோட்டுக்கள் 7 எண்ணிக்கைகளிலும், 100 ரூபாய் நோட்டு 1 எண்ணிக்கையிலும், 50 ரூபாய் நோட்டுக்கள் 4 எண்ணிக்கைகளிலும், 20 ரூபாய் நோட்டுக்கள் 40 எண்ணிக்கைகளிலும் மொத்தம் ரூ.56,000/- இருந்தது. பணத்திற்கான விவரத்தை கேட்க பேரிடர் நிவாரண தொகை பதிவேட்டில் அதற்கான

பதிவுகள் இருப்பதாகக் கூறி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள் பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டை ஒப்பிட்டு பார்த்தபோது ரூ.56,000/-க்கான பதிவுகள் சரியாக இருந்ததால், அந்த பணம் ஒப்படைக்கப்பட்டது. திருமதி.உமா மகேஸ்வரி அவர்கள் தன்னுடைய கருப்பு நிற OPPO CPH2213 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் உதவியாளர் திரு.தருமன் அவர்களை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்டின் வலது பின்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.300/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க செலவிற்காக எடுத்து வந்ததாக கூறியதால், அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள தக்கவகையில் இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது இளஞ்சிவப்பு நிற Samsung Galaxy F13 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் இருக்கைக்கு வலதுபக்கமாக மேற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்தவரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.A.முத்துசாமி என்றும், தான் தட்டச்சராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தனது சட்டையின் இடதுபுற மேல்பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.70/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க செலவிற்காக எடுத்து வந்த பணம் என்று கூறியதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது கருப்பு நிற Nokia C32 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அறைக்கு வெளியே கிழக்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் அமர்ந்திருந்த அலுவலக உதவியாளர் திரு.S.சுரேஷ் என்பவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை. அவர் தனது நீள நிற Redme norzo30A மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். தலைமையிடத்து துணை வட்டாட்சியர் கேபினை ஒட்டியிருந்த கேபினில் கிழக்கு பார்த்து இருந்த இருக்கையில் அமருந்திருந்த திருமதி.V.கல்பனா என்பவரை விசாரிக்க தான் உதவியாளராக அ1 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவருடைய செல்போன் கவரினுள் வைத்திருந்த பணம் ரூ.150/-ஐ எடுத்து ஆஜர் செய்து அவர் கூறிய விளக்கம்

ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது வெள்ளை நிற Realme narzo30 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அவருக்கு இடதுபுறமாக இருந்த கேபீனில் அமர்ந்திருந்த திருமதி.K.சசிகலா என்பவரை விசாரிக்க உதவியாளராக அ3 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்க செய்ய அவர் வைத்திருந்த ஐவட் பேக்கிலிருந்து பணம் ரூ.500/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க செலவிற்காக ATM-லிருந்து எடுத்து வந்த பணம் என்று கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால், அந்த பணம் ரூ.500/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது கருப்புநிற Samsung Galaxy M13 SM-M135FU/DS மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அவருக்கு இடதுபுறமாக இருந்த கேபீனில் அமர்ந்திருந்த திருமதி.V.கோமளாதேவி என்பவரை விசாரிக்க இளநிலை உதவியாளராக அ4 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய செல்போன் கவரிலிருந்து பணம் ரூ.500/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி விசாரிக்க செலவிற்காக வீட்டிலிருந்து எடுத்துவந்த பணம் என்றும், வட்டாட்சியர் அலுவலக பணியாளர்களின் தினசரி பணம் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது ஊதா நிற Samsung Galaxy A14 5G SM-A146B/DS மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அவருக்கு இடதுபுறமாக இருந்த கேபீனில் அமர்ந்திருந்த திருமதி.A.ஜெபமாலை மேரி என்பவரை விசாரிக்க உதவியாளராக அ2 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவுமில்லை. அவர் தனது நீலநிற Oneplus CPH 2619 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அவருக்கு இடதுபுறமாக இருந்த கேபீனில் தெற்குபார்த்தவாறு அமர்ந்திருந்த திருமதி.R.இந்து என்பவரை விசாரிக்க இளநிலை உதவியாளராக C2 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை. அவர் தனது வெள்ளை நிற Samsung Galaxy S23 Ultra

மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அவருக்கு இடதுபுறமாக இருந்த கேபினில் அமர்ந்திருந்த திருமதி.M.சபினா என்பவரை விசாரிக்க உதவியாளராக B2 இருக்கையை கவனித்து வருவதாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரது பர்ஸிலிருந்து பணம் ரூ.60/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். பணத்திற்கான விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இருந்ததால், பணம் ரூ.60/- அவரிடம் திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது கருப்பு நிற Oneplus 7 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். பின்னர் அலுவலக வளாகத்தில் நின்றிருந்த ஏழு நபர்களில் ஒருவரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.மு.கமல் என்றும், தான் கோத்தகிரி-2 கிராம நிர்வாக அலுவலர் கோத்தகிரி-1 (பொறுப்பு) கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், இன்றைய தினம் வகைபாடு மாற்றம் அறிக்கை சமர்ப்பிக்க வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தன்னுடைய பேண்டின் வலதுபுற முன்பக்க பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.6,000/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப்பற்றி கேட்க அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அந்த பணம் ரூ.6,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவர் தனது வெள்ளைநிற Realme 10 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். இரண்டாம் நபரை விசாரிக்க தன்னுடைய பெயர் திருமதி.S.கவிதா என்றும், தான் கோத்தகிரி நகர வருவாய் ஆய்வாளராகவும், இன்றைய தினம் ஜக்கனாரை கிராமம் கல்லூர் பகுதி பழங்குடியின மக்களுக்கு வன உரிமை வழங்குவது தொடர்பான அறிக்கை வழங்க வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. அவர் தனது மஞ்சள் நிற Oppo F21s Pro மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். மூன்றாமவரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.T.நவீன்குமார் என்றும் ஜெகதளா-1 கிராம நிர்வாக அலுவலராகவும், இன்றைய தினம் மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் கூட்டத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தனது பேண்டின் முன்பக்க வலதுபுற பாக்கெட்டிலிருந்த பர்ஸின் ஒரு மடிப்பில் பணம் ரூ.4,200/-ஐயும் மற்றொரு மடிப்பில் பணம் ரூ.140/-ம் எடுத்து ஆஜர் செய்தார். பணம் ரூ.4,200/-ஐ பற்றி கேட்க அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் பணம் ரூ.4,200/- விசாரணைக்காக

கைப்பற்றப்பட்டது. ரூ.140/-ஐ பற்றி கேட்க செலவிற்காக வைத்திருந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது வெள்ளைநிற Nokia C32 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். நான்காமவரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.R.மீனாட்சிசுந்தரம் என்றும் தான் கொணவக்கரை-1 கிராம நிர்வாக அலுவலர் என்றும், இன்றைய தினம் மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் கூட்டத்திற்கு வந்ததாகவும், வட்டாட்சியர் அவர்களை பார்த்து தற்செயல் விடுப்பு கேட்க வந்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தனது சட்டையின் மேல்புற பாக்கெட்டிலிருந்து பணம் ரூ.282/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க செலவிற்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது நீலநிற Infinix X6517 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். ஐந்தாமவரை விசாரிக்க தன்னுடைய பெயர் திரு.சா.ஜான் எட்வின் ராபர்ட் என்றும், தான் நெடுகுளா உள்வட்ட வருவாய் ஆய்வாளராக இருப்பதாகவும், இன்றைய தினம் மாவட்ட வழங்கல் அலுவலர் அவர்களின் கூட்டத்திற்கு வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய தனது பேண்டின் முன்பக்க வலதுபுற பாக்கெட்டிலிருந்த பர்ஸிலிருந்து பணம் ரூ.70/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தைப் பற்றி கேட்க செலவிற்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது வெள்ளைநிற Redmi Note 9 Pro Max மற்றும் நீலநிற Vivo 1820 மாடல் செல்போன்களை எடுத்து ஆஜர் செய்தார். ஆறாம் நபரை விசாரிக்க தன்னுடைய பெயர் செல்வி.S.ஹேமலதா என்றும், தான் கடினமாலா, நந்திபுரம் கிராம நிர்வாக அலுவலகராக பணிபுரிந்து வருவதாகவும், இன்றைய தினம் நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் கடினமாலா கிராமத்திற்கு கள ஆய்விற்காக வந்தவருடன் சென்று பணிமுடித்து வட்டாட்சியர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் ரூ.20/- இருந்தது. அந்த பணம் பேருந்து செலவிற்காக எடுத்துவந்த பணம் என்று கூறியதால், அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் தனது நீலநிற Vivo Y72 செல்பானை எடுத்து ஆஜர் செய்தார். ஏழாம் நபரை விசாரிக்க

தன்னுடைய பெயர் திருமதி.D.பிரியா என்றும், தான் அரக்கோடு, கொக்கோடு கிராம நிர்வாக அலுவலராக இருப்பதாகவும், இன்றைய தினம் நீலகிரி மாவட்ட ஆட்சியரின் கள ஆய்விற்கு சென்றுவிட்டு தன்னுடைய காரை எடுத்துசெல்ல வட்டாட்சியர் அலுவலகம் வந்ததாக தெரிவித்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் எதுவும் இருக்கவில்லை. அவர் தனது கருப்புநிற Redmi Note13 மாடல் செல்போனை எடுத்து ஆஜர் செய்தார். அதனைத்தொடர்ந்து திடீர் சோதனையின்போது பெறப்பட்ட செல்போன்கள் அனைத்தும் ஒவ்வொன்றாக / தனித்தனியாக அவற்றிற்குரியவர்களின் உதவியுடன் உரிய குறியீடுகளின் (Password) மூலம் G Pay, Phone Pe மற்றும் WhatsAPP ஆகிய செயலிகள் திறக்கபட்டு அதில் பதிந்திருந்த பதிவுகள் அனைத்தும் ஆராயப்பட்டன. அதில் சந்தேகத்திற்கிடமான பணப்பரிவர்த்தனைகள் நடந்ததற்கான தடயங்கள் இருந்த திருமதி.S.கோமதி அவர்களின் கருப்புநிற Vivo 1901 மாடல் செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) 866281042357334 மற்றும் IMEI (SIM Slot-II) 866281042357326 ஆகும். மேலும் G Pay No.9489138947 பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 06.06.2024-ம் தேதி முதல் 11.10.2024-ம் தேதி வரையில் இவரது வங்கி கணக்கிற்கு வெவ்வேறு நபர்களிடமிருந்து ரூ.4,91,000/- மதிப்புடைய 33 எண்ணிக்கையிலான பதிவுகள் இருந்தது. அந்த பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்திற்கு வரும் பொதுமக்கள் மற்றும் JCB உரிமையாளர்களிடமிருந்து பெற்ற கையூட்டு பணம் எனக்கருதிய காரணத்தால், மேற்படி பணபரிவர்த்தனைகள் அனைத்தும் வட்டாட்சியர் திருமதி.S.கோமதி அவர்களின் WhatsAPP எண்ணிற்க்கு பகிரப்பட்டு கணினியில் பதிவிறக்கம் செய்து அச்செடுக்கப்பட்டு தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அனைத்து பக்கங்களிலும் வட்டாட்சியர் திருமதி.S.கோமதி, காவல் ஆய்வாளர் மற்றும் நான் கையொப்பமிட்டு, விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் திருமதி.கோமதி அவர்களிடம் வங்கி கணக்கு எண்கள் குறித்து விசாரிக்க தனக்கு பாரத ஸ்டேட் வங்கி, மதுரை கிளை கணக்கு எண்.30858940626 என்றும், மதுரையில் கனரா வங்கியிலும், இந்தியன் வங்கியிலும் சேமிப்பு

கணக்கு எண்கள் உள்ளது என்ற விவரம் தெரிவித்தார். அடுத்ததாக தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.உமா மகேஸ்வரி அவர்களின் கருப்புநிற Oppo CPH2213 மாடல் செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) 861932056643671 மற்றும் IMEI (SIM Slot-II) 861932056643663 ஆகும். மேலும் Phone Pe No.9487576790 பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 30.05.2024-ம் தேதி முதல் 24.09.2024-ம் தேதி வரையில் இவரது வங்கி கணக்கிற்கு வெவ்வேறு நபர்களிடமிருந்து ரூ.1,28,000/- மதிப்புடைய 7 எண்ணிக்கையிலான பதிவுகள் இருந்தது. அந்த பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் கோத்தகிரி தாலுக்கா அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடமிருந்து அவர்களது தாலுக்கா அலுவலகம் சம்மந்தப்பட்ட பணிகளுக்காக பெற்ற கையூட்டு பணம் எனக்கருதிய காரணத்தால், மேற்படி பணபரிவர்த்தனைகள் அனைத்தும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.உமா மகேஸ்வரி அவர்களின் WhatsAPP எண்ணிற்க்கு பகிரப்பட்டு கணினியில் பதிவிறக்கம் செய்து அச்செடுக்கப்பட்டு தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அனைத்து பக்கங்களிலும் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திருமதி.உமா மகேஸ்வரி, காவல் ஆய்வாளர் மற்றும் நான் கையொப்பமிட்டு, விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பிரியா அவர்களின் கருப்புநிற Redmi Note13 மாடல் செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) 866083065571340 மற்றும் IMEI (SIM Slot-II) 866083065571357 ஆகும். மேலும் G Pay No.9843602206 பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 22.06.2024-ம் தேதி முதல் 19.10.2024-ம் தேதி வரையில் இவரது வங்கி கணக்கிற்கு வெவ்வேறு நபர்களிடமிருந்து ரூ.54,750/- மதிப்புடைய 15 எண்ணிக்கையிலான பதிவுகள் இருந்தது. அந்த பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் கோத்தகிரி தாலுக்கா அரக்கோடு, கொக்கோடு கிராம பொதுமக்களிடமிருந்து அவர்களது விண்ணப்பத்திற்கேற்ப பணியை செய்து கொடுக்க பெற்ற கையூட்டு பணம் எனக்கருதிய காரணத்தால், மேற்படி பணபரிவர்த்தனைகள் அனைத்தும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பிரியா அவர்களின் WhatsAPP

எண்ணிற்க்கு பகிரப்பட்டு கணினியில் பதிவிறக்கம் செய்து அச்செடுக்கப்பட்டு தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அனைத்து பக்கங்களிலும் கிராம நிர்வாக அலுவலர் திருமதி.பிரியா, காவல் ஆய்வாளர் மற்றும் நான் கையொப்பமிட்டு, விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் கிராம நிர்வாக அலுவலர் திரு.கமல் அவர்களின் வெள்ளைநிற Realme 10 மாடல் செல்போன் ஆராயப்பட்டது. மேற்படி செல்போனின் IMEI (SIM Slot-1) 869120060752918 மற்றும் IMEI (SIM Slot-II) 869120060752900 ஆகும். மேலும் Phone Pe No.6369704240 பதிவுகளை ஆராய்ந்து பார்த்ததில் கடந்த 10.06.2024-ம் தேதி முதல் 08.10.2024-ம் தேதி வரையில் இவரது வங்கி கணக்கிற்கு வெவ்வேறு நபர்களிடமிருந்து ரூ.22,800/- மதிப்புடைய 9 எண்ணிக்கையிலான பதிவுகள் இருந்தது. அந்த பணப்பரிவர்த்தனைகள் அனைத்தும் கோத்தகிரி தாலுக்கா கோத்தகிரி-2 மற்றும் கோத்தகிரி-1 கிராம பொதுமக்களிடமிருந்து அவர்களது விண்ணப்பத்திற்கேற்ப பணியை செய்து கொடுக்க பெற்ற கையூட்டு பணம் எனக்கருதிய காரணத்தால், மேற்படி பணபரிவர்த்தனைகள் அனைத்தும் கிராம நிர்வாக அலுவலர் திரு.கமல் அவர்களின் WhatsAPP எண்ணிற்க்கு பகிரப்பட்டு கணினியில் பதிவிறக்கம் செய்து அச்செடுக்கப்பட்டு தனது செல்போனிலிருந்து எடுக்கப்பட்டவை என எழுதி அனைத்து பக்கங்களிலும் கிராம நிர்வாக அலுவலர் திரு.கமல், காவல் ஆய்வாளர் மற்றும் நான் கையொப்பமிட்டு, விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது கணக்கில் வராத பணம் ரூ.10,200/-, சான்றொப்பமிட்ட வருகைப்பதிவேட்டின் நகல் பக்கம் 1 முதல் 10 வரை, வட்டாட்சியர் அலுவலக பேரிடர் நிவாரண பதிவேட்டின் நகல் 23.10.2024-ம் தேதி பக்கம் 1 முதல் 8 வரை மற்றும் வட்டாட்சியர் அலுவலக பணியாளர்களின் தினசரி பணம் கையிருப்பு பதிவேட்டின் நகல் பக்கம் 1 முதல் 4 வரை ஆகியவை விசாரணைக்காக செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. ஆய்வுக்குழு அலுவலர் இந்த திடீர் சோதனையின் போது திருமதி.கோமதி, திருமதி.உமா மகேஸ்வரி, திருமதி.பிரியா, திரு.கமல் மற்றும் திரு.நவீன்குமார் ஆகியோர்களை விசாரிக்க அவர்கள் பெறும் தொகையினை ரொக்கமாக வாங்கி வைத்திருந்தால் விஜிலென்ஸ் ரெய்டின்போது மாட்டிக்கொள்வோம்

என்பதால் டிஜிட்டல் பரிவர்த்தனை செய்துகொண்டோம் என தெரிவித்தனர். மேற்படி நபர்களை தனித்தனியாக விசாரித்து நான் வாக்குமூலம் பதிவு செய்தேன். இந்த திடீர் தணிக்கையின்போது கோத்தகிரி தாலுக்கா அலுவலக அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். மேற்படி திடீர் சோதனை நடவடிக்கைகள் 23.10.2024-ம் தேதி 19.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 24.10.2024-ம் தேதி காலை 05.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி தயாரிக்கப்பட்ட நடவடிக்கைகளை இத்துடன் இணைத்துள்ளேன். அதில் மேற்படி திடீர் ஆய்வு சம்மந்தமான அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டுள்ளேன். மேலும் திடீர் ஆய்வின்போது தயார் செய்த செயல்முறை நடவடிக்கைகள், கைப்பற்றப்பட்ட பணம் ரூ.10,200/-ம், கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், திருமதி.கோமதி, திருமதி.உமா மகேஸ்வரி, திருமதி.பிரியா, திரு.கமல் மற்றும் திரு.நவீன்குமார் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திவந்த மொபைல் போன்களில் இருந்த G Pay, Phone Pe ஆகிய செயலிகளின் விவரங்கள் குறித்து போன் டிஸ்ப்ளேகளிலிருந்து எடுக்கப்பட்ட போட்டோ காப்பிகளின் பிரிண்ட் அவுட்டுகள் ஆகியவற்றை இத்துடன் இணைத்துள்ளேன். எனவே மேற்கண்ட முறைகேடுகளில் தொடர்புடைய திருமதி.கோமதி, திருமதி.உமா மகேஸ்வரி, திருமதி.பிரியா, திரு.கமல் மற்றும் திரு.நவீன்குமார் ஆகியோர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். ஒப்பம் K.சீனிவாசன் உதகமண்டலம், 24.10.2024. Submitted: I have received the complaint on 24.10.2024 at about 11.00 hrs from Tr.K.Srinivasan, Special Tahsildar (Elections), Special District Inspection Cell Officer, District Collectorate, Udhagamandalam and registered a case in Nilgiris Vigilance and Anti-Corruption Cr.No.6/2024 u/s. 7(b) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 at about 11.30 hrs ஒப்பம் P.பரிமளாதேவி 24.10.2024 Inspector of Police, Vigilance and Anti-Corruption, The Nilgiris. முதல் தகவல் அறிக்கையின் அசல், அசல் புகார், அசல் செயல்முறை நடவடிக்கைகள் மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.10,200/- ஆகியவற்றை கனம் தலைமை நீதித்துறை நடுவர், தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், உதகமண்டலம்

அவர்களுக்கு அனுப்பிவைத்தும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

24-10-2024
[P. PARIMALADEVI]
INSPECTOR OF POLICE,
VSAC, The NILGIRIS.